ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 37

# ஸ்ரீ சீமாச்சார் ஸ்வாமி

என்கிற

# ஸ்ரீமதுபயவே. கொத்திமங்கலம். வீரராகவார்ய மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி, திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம் ஸ்ரீமத் அண்ணய தாதயார்ய மஹாதேசிகனின் மாதுலர் வம்சமான நல்லான் சக்ரவர்த்தி வம்சத்தில், 'கொத்திமங்கலம்' என்கிற அக்ரஹாரத்தில் ஸ்ரீ வீரராகவாசார்யர் (அப்பா ஸ்வாமி) என்கிற ஸ்வாமிக்குப் பௌத்ரராக, ஸர்வஜித் வருஷம் வைகாசி மாதம் கார்த்திகை நக்ஷத்ரத்தன்று திருவவதாரம் பண்ணினார். பிதாமஹர் திருநாமமான "வீரராகவன்" என்பதே இவருக்கும் சூட்டப்பட்டது. இவரின் பிதாமஹரே இவருக்கு ப்ராசார்யரானபடியாலே அவர் எழுந்தருளியிருக்கையில் இவரைத் திருநாமம் இட்டு அழைக்கமுடியாதே என்பதற்காகச் செல்லமாக "சீமாச்சு" என அழைக்கப்பட்டார். பின்னாளில் இத்திருநாமமே "சீமாச்சார்" என நிலவிற்றாம்.

இந்த ஸ்வாமிக்குத் தம் பெரிய தகப்பனாரிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் ஆகி, பிதாமஹன் ஸ்வாமி ஸந்நிதியில் பரந்யாஸமும் நடந்தது. புலிக்குன்றத்தைச் சேர்ந்த ஸ்த்ரீ ரத்னத்துடன் ஸ்வாமிக்கு விவாஹம் நடந்தேறியது. அன்று முதலே ஔபாஸனம் ஆரம்பித்துக் கடைசி வரை விடாமல் அநுஷ்டித்தாராம். ஸ்வாமியின் தேவிகள் வைதிகக் கடமைகளில் ஸ்வாமியையே விஞ்சியவராம்.

நம் ஸ்வாமிக்குத் தம் பெரிய தகப்பனாரான ஸ்ரீ கோபாலண்ணா ஸ்வாமியிடமே க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபமும் உபநிஷத் பாஷ்ய காலக்ஷேபமும் ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேபமும் நடந்ததாம். நம் ஸ்வாமி, தாம் அதிகரிக்கும் க்ரந்தங்கள் அனைத்தையும் அதிகரண தசையிலேயே ஓலைச்சுவடிகளில் பட்டோலை பண்ணி அதையே வாசித்தாகுமாம்; பேப்பர் புஸ்தகம் அநாசாரம் என்பதால். வேதத்தையும் க்ரந்த சதுஷ்டயத்தையும் கூட நம் ஸ்வாமி ஓலைச்சுவடிகளில் எழுதியாயிற்று.

நம் ஸ்வாமி, ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகனின் ஆஹ்நிகப்படி நித்யாநுஷ்டானங்கள் பண்ணியாகுமாம். ப்ரக்ருதம் திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம் வலயபேட்டை ஸ்ரீமதுபயவே ராமாநுஜ தாதயார்ய மஹாதேசிகன் பால்யத்தில் கொத்திமங்கலத்தில் வித்யாப்யாஸம் பண்ணுகையில் நம் ஸ்வாமியால் ஈர்க்கப்பட்டு அனுபவித்த மஹான் ஆவார். நம் ஸ்வாமி நித்யம் விடியற்காலை இரண்டு முதல் இரண்டரை மணிக்குள்ளாகவே துயிலெழுந்தாகுமாம். விழித்தவுடன் பகவந்நாம ஸங்கீர்த்தனம் நியதமாகப் பண்ணி, தம் ஆசார்யன் திருநாமத்தையும், ஸ்ரீமத் அண்ணய தாதயார்ய மஹாதேசிகன் திருநாமத்தையும், ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகன் திருநாமத்தையும் நூற்றெட்டு ஆவ்ருத்தி அநுஸந்தித்துப் பின்பெருமாள் வரை குருபரம்பராநுஸந்தானம் பண்ணியாகுமாம். அதன்பின் ஸ்ரீ வங்கீபுரத்து நம்பிகளின் காரிகா ச்லோகங்களை நிர்வேதாநுஸந்தான நிமித்தம் அநுஸந்தித்து, பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளித் தம் திருவாராதனமான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை த்யானித்தாகுமாம்.

பின்னர் அநேகமாக எல்லா தேசிக ஸ்தோத்ரங்களையும் அநுஸந்தானம் பண்ணியாகுமாம். பின் ஏரிக்கரைக்கு ஏள்ளி சங்காநிவ்ருத்யாதிகள் முடித்துச் சௌசம் பண்ணிமுடிக்கும் பர்யந்தம் மௌனம் ஸாதித்தாகுமாம். பிறகு மாவிலையாலோ மகிழ இலையாலோ தந்த தாவநம் பண்ணி அவகாஹ ஸ்நானம் கண்டருளித் திருப்பரிவட்டம் தரித்தாகுமாம். ஸ்நானம் பண்ணுகையில் மண்கொண்டு திருமேனியைத் தேய்த்தாகுமாம். ஸ்நாந காலத்தில் வரத நாம ஸங்கீர்த்தனம் பண்ணியாகுமாம். ஸ்வாமி தீவ்ர வரத பக்தர். பின் திருப்புட்குடலையுடன் கோவில் புஷ்கரிணிக்குப் புறப்பட்டுத் த்வாதச திருமண் காப்புகள் சாற்றிக்கொண்டு ஸந்த்யாவந்தனாதிகள் பண்ணியாகுமாம். பின் ஜபம், உபஸ்தானம், அஷ்டாக்ஷர ஜபம், ஆதாரசக்த்யாதி தர்ப்பணம் முடித்துத் திருமாளிகைக்குத் திரும்ப ஏள்ளியாகுமாம்.

பின் ஔபாஸனம், அபிகமனம், உபாதானமாகத் துளஸீ புஷ்பங்கள் க்ரஹித்தல் நிகழுமாம். ச்ரோதாக்கள் இருப்பின் பாட போதனம் பண்ணியாகும். அடுத்து ப்ரம்ம யஜ்ஞம். பின் மாத்யாஹ்நிக ஸ்நானம் (அதற்கு முன் குளக்கரையில் உள்ள தம் பிதாமஹன் ப்ருந்தாவனத்தின் முன் நியதமாக தண்டம் ஸமர்ப்பித்தாகுமாம்). மாந்யாஹ்நிகம் இஜ்யாராதனம், வரதன் ஸ்ரீநிவாஸன் கண்ணன் முதலிய எம்பெருமான்களுக்கும் ஆழ்வார் எம்பெருமானார் தேசிகனுக்கும் நடத்தியாகுமாம். பெருமாளுக்கு மட்டும் கண்டருளப்பண்ணிய அன்னத்தால் வைச்வதேவம் பண்ணியாகுமாம். பிறகு அதிதிகளை ப்ரதீக்ஷித்து அதிதிகள் வந்தானதும் ஆசமனம் பண்ணி அந்தர்யாமி ஆராதனம் பண்ணியாகுமாம். உணவு உண்ண ஆசமனம் பண்ணிய பின் கீதார்த்த ஸங்க்ரஹத்தை அநுஸந்தானம் பண்ணி, பெருமாள் தீர்த்தம் மற்றும் சந்தனம் எடுத்துக்கொண்டு பலகையில் அமர்ந்தருளி கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் பண்ணிச் சாப்பிட்டாகுமாம். அநுயாகம் முடிந்தபின் புஷ்கரிணியில் திருக்கரத்தை ஷோதித்துக்கொண்டாகுமாம். திருமாளிகை திரும்புகையில் தேசிக ப்ரார்த்தனாஷ்டகம் ப்ரபத்தி முதலியவை அநுஸந்தித்தாகுமாம். விச்ராந்தி என்பதே கிடையாதாம்.

ஸ்வாத்யாய காலத்தில் க்ரந்தங்களை ஸேவிப்பதும் க்ரந்தங்களைப் பட்டோலை செய்வதும் நடக்குமாம். வேதம் அத்யாபனம் பண்ணுதல், க்ரந்த சதுஷ்டயம் ஸேவித்தல், பாலர்கள் வந்து ப்ரார்த்தித்தால் பகவத் கதைகளைச் சொல்லுதல், ஓலைச்சுவடிகளில் லேகநம், என இப்படி ஸ்வாத்யாய காலம் கழியுமாம். பின் ஸாயம் ஸந்த்யோபாஸனம் ஔபாஸனம் முடித்து அமுது செய்தாகும். பின் சயனிக்கும் முன் ஸ்ரீவைகுண்ட்ட கத்யமும் பகவத் த்யாந ஸோபாநமும் அநுஸந்தித்தாகுமாம்.

ஸ்வாமி, ஸ்ரீமதுபயவே திருமலை சதுர்வேத சதக்ரது வலயபேட்டை நாவல்பாக்கம் ஸ்ரீநிவாஸ தாதயார்ய மஹாதேசிகனிடம் வேத அத்யயனம் பண்ணியாயிற்றாம். ஒருமுறை தம் ஆசார்யர் வஸித்த க்ஷேத்ரமான ஸ்ரீநாவல்பாக்கத்துக்கு எழுந்தருள நேர்ந்ததாம். அப்போது நம் ஸ்வாமி, அந்த ஸ்ரீக்ராம எல்லையிலேயே வண்டியை விட்டுக் கீழே இறங்கி, தரையின் மேல்பகுதி மண்ணைச் சற்று அகற்றிவிட்டுத் தீர்த்தம் ப்ரோக்ஷித்து, தரையில் ஸாஷ்டாங்க ப்ரணாமங்கள் பண்ணியாயிற்றாம். ஏன் என ஒரு ஸ்வாமி வினவியதற்கு, "சிஷ்யன் ஆனவன், ஆசார்யன் விஷயத்தில் மட்டுமின்றி அவர்

ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களான க்ருஹம், திருவாராதன ஸ்தலம், ஸ்ரீகோசங்கள், அவரது ஸ்ரீக்ராமம் என எல்லாவற்றிலும் பக்தி, விநயம் காட்டியாகவேணும்" என ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ஸாரத்தில் அருளியுள்ளபடி என விடையருளிற்றாம் நம் ஸ்வாமி. நம் ஸ்வாமி, தம்மை விட ஐம்பது திருநக்ஷத்ரங்கள் சிறியவரான தம் ஆசார்ய பௌத்ரரிடம் பேசுகையில், “தேவள்” என்றே அவரை விளித்தாகுமாம், அவ்வளவு ஆசார்ய பக்தி நம் ஸ்வாமிக்கு.

நம் ஸ்வாமி, ஸ்ரீ கைசிக மாஹாத்ம்யத்தை ஓலைச்சுவடியில் எழுதி ஸ்ரீ காஞ்சீக்கு அதை அனுப்பியாயிற்றாம். வரதபக்தியே வடிவெடுத்த ஸ்வாமியின் கைவண்ணமான அந்த ஓலைச்சுவடியைப் பார்த்தே நம் அத்திகிரித் திருமால் ஸந்நிதியில் கைசிக புராண படனம் நடக்குமாம். மற்றவர்களிடம் குற்றம் குறைகள் சொல்வதும், கோபம் கொள்வதும் ஸ்வாமி அறியாதவைகளாம். திருவாராதன ஸமயத்தில் அலங்காராஸனத்தின் போது தினம் ஒரு அத்யாயம் ஸ்ரீமத் பகவத் கீதை ஸேவிப்பதும் ஸஹஸ்ரநாமம் ஸேவிப்பதும் நம் ஸ்வாமியின் வழக்கமாம். யாருக்கேனும் உடம்புக்கு முடியாவிட்டால் நம் ஸ்வாமியிடம் வந்து ஸேவிப்பார்களாம். நம் ஸ்வாமியும் ஸஹஸ்ரநாமம் ஜபித்துத் தீர்த்த ப்ரோக்ஷணம் பண்ணியதும் குணமாகிவிடுமாம். அப்படிப்பட்ட நிஷ்டர் நம் ஸ்வாமி.

ஒருமுறை நம் ஸ்வாமி ஸ்ரீமதுராந்தகத்திற்கு ப்ரஹ்மோத்ஸவ ஸமயத்தில் எழுந்தருளியாயிற்றாம். அன்று திருத்தேர் உத்ஸவம். நம் ஸ்வாமியைத் தேரில் ஏறிப் பெருமாளை மங்களாசாஸனம் பண்ண சிலர் ப்ரார்த்தித்தனராம். ஸ்வாமியோ, "தப்பு. ஏறமாட்டேன். ஏறக்கூடாது. தேர் வைநதேயன். ஸாக்ஷாத் நித்யஸூரி. நம் கால் படக்கூடாது. தேர்வடம் கூட புனிதமானது. அதை நாம் தாண்டுதல்கூட அபசாரம்” என அருளிற்றாம்.

ஒரு சிறுவர் நம் ஸ்வாமியைத் தமக்கு ப்ரஹ்மோபதேசம் பண்ணிவைக்க ப்ரார்த்தித்தாராம். ஸ்வாமியோ, "அவ்வாறு செய்ய என்னைத் தகுதிப் படுத்திக்கொள்ள வேணும். முப்பதாயிரம் ஆவ்ருத்திகள் காயத்ரீ ஜபித்திட வேணுமே" என அருளி, பின் அப்படியே செய்வித்தாயிற்றாம். சாஸ்த்ர விச்வாஸம், ஆசார அநுஷ்டானம், வைராக்யம், பகவத் பாகவத ஆசார்ய பக்தி, பாண்டித்யம், பரோபகாரம் என அனைத்திலும் நம் ஸ்வாமிக்கு நிகர் அவரே எனலாம்.

ஸ்ரீமத் நாவல்பாக்கம் பெரிய ஸ்வாமி ஒருமுறை காஞ்சீயில் தம் திருமாளிகையில் அர்ச்சையில் தேவப்பெருமாளை ப்ரதிஷ்டை பண்ணப் பாரித்தாயிற்றாம். ப்ரதிஷ்டைக்கு பாகவத கரஸ்பர்சமும் முக்யாங்கமானதால் நம் ஸ்வாமியை ப்ரார்த்தித்து பிம்பஸ்பர்சம் செய்வித்து மகிழ்ந்தாயிற்றாம்.

## ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

ஸ்ரீவத்ஸவம்ச கலசார்ணவ பூர்ணசந்த்ரம்
கோபாலதேசிக குரூத்தம லப்த போதம் |
ஸ்ரீசக்ரவர்த்தி குருவர்ய க்ருதாத்மரக்ஷம்
ஸ்ரீவீரராகவ குரும் சரணம் ப்ரபத்யே ||

ஸ்ரீமதே வீரராகவார்ய மஹாதேசிகாய நம:

# # # # # # # # # # # # # # # # # # #